உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்~06 விசுவாசுவ வருடம் சித்திரைத் திங்கள் சித்திரை ~2025 பூமி~04




## இந்திய பிரதமர் திருக்கோணேஸ்வரர் ஆலய புனரமைப்புக்கு இந்தியா உதவுவதாக உறுதி அளித்தார்

ஈழத்திருநாட்டில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. போர்த்துக்கீசர் இயற்கை வளம் நிறைந்த திருகோணமலையை கைப்பற்றிய போது பெருங்கோபுரங்களுடன் காட்சியளித்த கோணேஸ்வர பெருமானுடைய கோயிலை இடித்து அழித்தார்கள்.

அதன் பின்பு சேதமடைந்து போன கோயிலுக்கு உள்ளே ஒரு கோட்டையை கட்டி திருக்கோயில் சூழ்ந்த பிராந்தியத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டார்கள். போர்த்துக்கீசரைத் தொடர்ந்து ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் அந்தப் பகுதியிலே கிறிஸ்தவ தேவாலயங்களையும் கட்டி கடற்படை முகாம்களை அமைத்து பீரங்கிகளை பொருத்தி கோயில்கள் இருந்த இடத்தை சிதைத்தார்கள்.

பிரித்தானியர்கள் இந்த நாட்டை விட்டு மெல்ல மெல்ல நகருகின்ற காலத்திலே மீண்டும் கோணேஸ்வரத்தை கட்ட வேண்டும் என்று திருகோணமலை வாழ் அன்பர்கள் மற்றும் இலங்கை வாழ் அன்பர்கள் எடுத்த முயற்சியின் பயனாக இன்றைய கோணேஸ்வரர் கோயிலை நாம் காண்கிறோம். ஆதி கோணேஸ்வரர் கோயில் கடல் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. மிகப்பெரிய இரண்டாவது கோயில் இடிபாடுகள் இப்பொழுதும் கடலுக்குள்ளே காணப்படுகின்றன. கடல் ஆராய்ச்சி செய்பவர்கள் அழகான சிற்பங்கள் திருகோணமலை கடலுக்குள்ளே இருப்பதை படம் பிடித்து வெளியிலே கொண்டு வந்து வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த நிலையிலே தான் இன்றைய வரலாற்று சிறப்பு வாய்ந்த திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள சூழலிலே புத்த கோயிலை உருவாக்கி மிகப்பெரிய புத்தருடைய சிலையை வைத்து பௌத்த ஆதிக்கத்தை கோணேஸ்வர சுற்றாடலிலே உருவாக்கினார்கள். இலங்கையை ஆண்ட ஒவ்வொரு அரசும் திருகோணமலையை கைப்பற்றுவதிலே ஆர்வம் காட்டி வந்தார்கள்.

முதலாவது பிரதமராக கடமையாற்றிய டி. எஸ். சேனநாயக்க திட்டமிட்டு திருகோணமலைச் சூழலில் சிங்கள குடியேற்றங்களை உருவாக்கினார்கள். தமிழ் அரசியல் தலைவர்கள் அதனை எதிர்த்த போதிலும். அவர்களுடைய திட்டமிடல் ஆட்சியிலே ,ருந்த காரணத்தினால் அவர்கள் சிங்கள மக்களை குடியேற்றுகின்ற முயற்சியில் தொடர்ந்தார்கள். டி.எஸ். சேனநாயக்காவை தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு பௌத்த பிரதமரும் அமைச்சர்களும் திருகோணமலையில் கண் வைத்து செயற்பட்டதால் திருகோணமலையில் தமிழர் பிரதேசங்கள் பறிபோவதை பலரும் அறிவார்கள். சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் கூட இன்று திருகோணமலையில் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் விரிவாகக் கூடிய நிலையில் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையிலே திருக்கோணேஸ்வர கோயிலுக்கு கெடுபிடிகளை

ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன்

உருவாக்கி கோயிலுக்குச் செல்லும் பாதையில் இருமருங்கிலும் பிற மாவட்டத்தில் இருந்து சிங்களர்களைக் கொண்டு வந்து பெட்டிக்கடைகளை அமைத்து வாணிபத்திலே ஈடுபட வைத்துள்ளார்கள். இது கோயில் ஆதிக்கத்தை பறிப்பதற்கான முயற்சி. இது தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றமும், திருக்கோணேஸ்வர கோயில் நிர்வாக சபையும், சைவ அமைப்புக்களும் தொடர்ந்து கண்டனங்கள் வெளியிட்ட போதும் பயனில்லை.

இந்நிலையில் கோணேஸ்வரத்துக்கு சமீபமாக புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களம் கிளை ஒன்றினை நிறுவி தொல்லியல் அடையாளங்கள் திருகோணாமலையில் இருப்பதனால் திருகோணமலை கோயில் விஸ்தீரனத்தை செய்யவிடாது சட்டம் போட்டு தடுக்கிறார்கள். கோணேஸ்வரர் கோயிலுக்கு சென்ற ஆண்டு இங்கிலாந்தில் செய்யப்பட்ட 1200கிலோ எடை உடைய பெரிய காண்டா மணி கோயிலிலே மணிக்கூட்டு கோபுரம் கட்ட முடியாததால் ஒரு கரையிலே வைக்கப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் திருக்கேதீஸ்வரர் திருப்பணியிலே அக்கறை காட்டி கற்கோயிலாக திருக்கேதீஸ்வரர் சுற்றுப் பிரகாரத்தை பல கோடி ரூபாய் செலவிலே மாற்றி அமைத்தமையை யாவரும் அறிவர்.

இந்நிலையில் திருக்கோணேஸ்வரத்தையும் இந்திய அரசாங்கம் பொறுப்பெடுத்து திருப்பணிகள் செய்ய வேண்டும் என்று பல அன்பர்கள் வேண்டினார்கள். சிவபூமி அறக்கட்டளை இந்த விடயத்தில் மிகவும் அக்கறை எடுத்தது. அந்த வேண்டுதலை ஏற்று, இந்திய நிதி அமைச்சராக விளங்குகின்ற திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் இலங்கை விஜயத்தின் போது திருகோணமலை திருக்கோணேஸ்வரர் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து அங்கு வருகை தந்த போது, அடியேனும் திருக்கோணேஸ்வரர் நிர்வாகத்தோடு இணைந்து நேரடியாக சென்று, திருக்கோணேஸ்வரர் சூழலை விளக்கப்படுத்தி, பாரிய திருப்பணியை இந்திய அரசு செய்ய வேண்டும் என்று வேண்டுதல் விடுத்தார்கள்.

அவர்கள் இந்திய அரசுக்கு தான் எடுத்துரைப்பதாக குறிப்பிட்டு சென்றார்கள். இப்பொழுது திருக்கோணேஸ்வரர் திருப்பணியில் இந்திய அரசு சற்று அக்கறை எடுக்கத் தொடங்கி இரண்டு தடவை

திருக்கோணேஸ்வரர் நிர்வாகத்தை கொழும்புக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி, கட்டுமான பணிகளுக்கான செலவினம் பற்றிய உத்தேச மதிப்பீட்டினை பெற்றார்கள். இலங்கைக்கு நான்காவது தடவையாக கௌரவ இந்திய பிரதமர் நரேந்திர மோடி வருவதாக அறிவிக்கப்பட்ட போது எப்படியும் திருக்கோணஸ்வரர் திருப்பணியை இச்சந்தர்ப்பதிலே தொடங்க வேண்டும் என்று பலர் வேண்டுதல் விடுத்தார்கள். இந்தியாவிலிருந்து ஒரு குழு வந்து இந்திய பிரதமர் திருக்கோணேஸ்வரத்தை வழிபாடு செய்வது தொடர்பாக ஆராய்ந்தார்கள். சித்திரை மாதம் 4, 5 மற்றும் 6-ம் தேதி இலங்கையில் நின்ற கௌரவ இந்திய பிரதமர் நரேந்திர மோடி திருகோணமலை மாவட்டத்திலே சம்பூர் என்ற கிராமத்தில் சூரிய ஒளி தொடர்பான ஒரு வேலை திட்டத்தை ஆரம்பிக்க இருப்பதை அறிந்து, இந்திய பிரதமர் திருகோணாமலைக்கு வருவது நிச்சயம் என்று எல்லோருமே எதிர்பார்த்தார்கள். ஆனால் பெரும் ஏமாற்றம். இந்திய பிரதமர் கொழும்பிலே நின்று சம்பூர் வேலைத்திட்டத்தை நிகழ்நிலை மூலம் ஆரம்பித்து வைத்தார்கள். அனுராதபுரம் பௌத்த விகாரையை தரிசித்து விட்டு கொழும்பில் தனது கடமைகளை நிறைவேற்றிவிட்டு இந்திய பிரதமர் இங்கிருந்து இராமேஸ்வரம் சென்று பாம்பன் பாலத்தை புதிய வடிவமைப்பிலே திறந்து வைத்திருக்கிறார்கள்.

இந்திய பிரதமர் திருகோணமலை திருக்கோணேஸ்வரத்துக்கு வரவில்லை என்று ஏங்குகின்ற அன்பர்களுக்கு அவர் ,லங்கையை விட்டு புறப்படுகின்ற போது ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் இலங்கையில் உள்ள திருகோணமலை கோணேஸ்வர ஆலய எதிர்கால விருத்திக்கு இந்திய அரசு உதவுமென்றும் சீதாஎலியா என்ற நுவரேலியாவில் இருக்கின்ற வரலாற்று இடத்தையும் இந்திய அரசு புனருத்தாரணம் செய்யும் என்றும் பௌத்த ஆலயமாக இருக்கிற அனுராதபுர புராதன ஆலயத்துக்கும் இந்திய அரசு எதிர்காலத்தில் உதவும் என்றும் அந்த கூறப்படுகிறது.

எனவே திருக்கோணேஸ்வரர் கோயில் தொடர்பாக இன்னும் இலங்கைவாழ் சைவ மக்கள் இந்தியாவை நம்பி காத்திருக்கிறார்கள். கோயில் விஸ்தரிக்கப்பட வேண்டும், கோயிலுக்கு போகின்ற யாத்திரியர்கள் ஆறி அமர்ந்து கும்பிடுவதற்கு ஒரு மண்டபம் இல்லாத குறையை போக்க வேண்டும், ராஜ கோபுரம் கட்டுகின்ற பணிக்கு இந்திய அரசு முன் வர வேண்டும், ஏற்கனவே லண்டனில் இருந்து கொண்டுவரப்பட்ட மிகப்பெரிய மணியை பொருத்துவதற்கு

இலங்கை தொல்லியல் திணைக்களத்துடன் பேசி அவற்றுக்கு ஒரு நிரந்தர தீர்வை இந்திய அரசு ஏற்படுத்த வேண்டும் என்று காத்திருக்கிறார்கள். இன்னும் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். கௌரவ பிரதமருடைய அந்த அறிவிப்பு வார்த்தை ஆறுதல் அளிக்கின்றது என்று எதிர்பார்க்கின்றோம். நல்லவை நடக்க திருவருள் துணை நிற்க வேண்டும்.

**கலாநிதி. செஞ்சொற்செல்வர்**
**ஆறு. திருமுருகன்**

## தேசிய மட்டத்தில் சாதித்த யாழ் இந்து மாணவர்கள்




2025 மார்ச் 25 ஆம் திகதி நடைபெற்ற நாட்டின் பல முன்னணி பாடசாலைகள் கலந்துகொண்ட அகில இலங்கை இரசாயனவியல் வினாடி வினா போட்டியில், யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள் முதலாமிடத்தைப் பிடித்தமை பெருமைக்குரிய நிகழ்வாகும்.

இவ்வருட போட்டி, மாணவர்களின் விஞ்ஞானப் புலனுணர்வை வளர்த்துக் கொடுக்கும் முகமாகவும், அவர்கள் எண்ணும் திறன், கற்பாற்றல் மற்றும் குழு ஒருமைப்பாடு போன்ற பண்புகளை ஊக்குவிக்கும் முகமாகவும் அமைந்தது. இக்கோட்பாடுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட வினாடி வினா போட்டியில், யாழ் இந்துக் கல்லூரி அணியின் மாணவர்கள் சீரான பதில்கள், தெளிவான சிந்தனைகள், அதிநவீன அறிவுத்திறன்கள் மூலம் அனைவரையும் வியப்பூட்டினார்கள்.

மாணவர்களின் வெற்றிக்கு பின்னால் வழிகாட்டிய ஆசிரியர்களின் துணையும், பாடசாலையின் நிர்வாகத்தினரின் ஊக்கமும் சிறப்பாக இருந்தது. இச்சாதனையால் யாழ் இந்துக் கல்லூரியின் கல்வி கௌரவம் மேலும் உயர்ந்துள்ளது.

# பக்தி வெள்ளத்தில் மாவைக் கந்தவேள் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம்



50 ஆண்டுகள் கழித்து, 2025 ஏப்ரல் 11 ஆம் தேதி பங்குனி உத்திர தினத்தில், மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் மஹா கும்பாபிஷேகம் மிகவும் விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது.

இந்த புனித நாளில், இந்தியாவின் பல்வேறு ஆதீனங்களும், ஈழத்து சமயப் பெரியவர்களும், சிவாச்சாரியர்களும் பங்குபற்றியமை விசேட அம்சமாகும். மாவைக் கந்தவேளின் அருளைப் பெற பலர் திரளாக வந்து பக்தி பூர்வமாக கலந்து கொண்டனர். தொலைதூரங்களிலிருந்தும் பக்தர்கள் வந்திருந்தனர். கோயில் வளாகம் தேவலோகம் போல காட்சியளித்தது. நாதஸ்வரம், தவில் இசைக்குழுக்கள் முழங்க, பக்திமயமாக இருந்தது.



பக்தர்களுக்கான அன்னதானமும் ஒழுங்காக செய்யப்பட்டு, அனைவரும் திருப்தியுடன் பங்கேற்றனர். இந்நிகழ்வு, மாவிட்டபுரத்தின் ஆன்மீக அடையாளத்தையும், பக்தர்கள் மனங்களில் இறைவன் மீதான பக்தியையும் வலுப்படுத்தும் ஒரு மைல்கல்லாக அமைந்தது.





# பெருமளவு மக்கள் பார்வையிட்டு செல்லும் சிவபூமி திருக்குறள் வளாகம்




தமிழ்மொழி உலகிலேயே தொன்மையான, வளமான, அறிவியல் மற்றும் இலக்கிய சிறப்புகள் நிரம்பிய ஒரு அற்புதமான மொழியாக விளங்குகிறது. தமிழ் மொழியின் பெருமையை நிலைநிறுத்தும் அடையாளங்களுள் ஒன்றாக மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி திருக்குறள் வளாகம் கணிப்பின்றி உயர்ந்து நிற்கிறது. இந்த அரிய அறிவுக் கோயிலாக விளங்கும் வளாகம் தமிழ் இலக்கியத்தின் முத்திரையாக மட்டும் அல்லாமல், கல்வி, கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு மரபுகளின் ஊற்றாகவும் அமைந்துள்ளது.

தினமும் பெருமளவு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்கள் இந்த வளாகத்தை பார்வையிட்டு செல்கிறார்கள். அந்த வகையில், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏராளமான கலைஞர்கள் இந்த வளாகத்தை பார்வையிட்டு அதன் சிறப்பை வியந்து பாராட்டினர். திருக்குறள் வளாகத்தின் அமைப்பு, அதன் அழகு மற்றும் பன்முக அறிவுத்தளமாக விளங்கும் விதம் அவர்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்யும் ஒரு மையமாக இது விளங்குவதை அவர்கள் உறுதியாக உணர்ந்தனர்.





சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களின் முயற்சியின் விளைவாக இந்த திருக்குறள் வளாகம் உருவாகியது. தமிழ் மொழியையும் திருக்குறளையும் உலகம் முழுவதும் விளங்கச்செய்யும் பணியில் அவர் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார். பாரத தேசத்தின் உச்ச நீதிமன்றத்தின் மாண்புமிகு நீதியரசர்

அரங்க மகாதேவன் அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து, இந்த வளாகத்தை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.



தற்போது, பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் திருக்குறள் வளாகத்துக்கு வருகை தருகிறார்கள். இது தமிழின் இலக்கியச் சிறப்பை அறிய மட்டுமல்லாது, தமிழ்மொழியின் அறிவு செறிந்த வேர்களை புரிந்து கொள்ளும் வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

இவ்வளாகம் சிறப்பான கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக உருவாகும் நாளை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். எதிர்காலத்தில் இது ஒரு சிறந்த தமிழ் பல்கலைக்கழகமாக வளர்ந்து, உலகளாவிய தமிழர்களுக்கான அறிவுத் திருக்கோயில் மையமாக மாறும் என நம்பலாம்.





# 18 ஆண்டுகளை நிறைவு செய்கிறது சிவபூமி முதியோர் இல்லம்



ஆதரவற்ற முதியவர்களுக்கு அடைக்கலம் வழங்கி அவர்களை கௌரவமாக பாதுகாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட,சுழிபுரம் முதியோர் இல்லம் 18 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. பல நூறு முதியவர்கள் இங்கு தங்கி பயன் பெற்றுள்ளதுடன் இதுவரை 63 முதியவர்கள் இந்த முதியோர் இல்லத்தில் இருந்து இறைபதம் அடைந்துள்ளார்கள்.

இந்தியாவின் புகழ்பெற்ற சரவண மாணிக்கவாசக குரு பரமாச்சாரிய சுவாமிகளின் பங்குபற்றலுடன சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா 07.04.2025 மாலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முதியோர் இல்லத்திற்குரிய காணியை கொள்வனவு செய்வதற்கு நிதி உதவி வழங்கிய திரு பாலச்சந்திரன் அவர்களது துணைவியார் இந்த நிகழ்விற்கு, அமெரிக்காவில் இருந்து வருகை தந்து பிரதம





விருந்தினராக கலந்து கொண்டார். இறைபதம் அடைந்த அமரர் பாலச்சந்திரன் 18 ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கிய நிதி உதவியை பயன்படுத்தியே இந்த முதியோர் இல்லத்திற்குரிய காணி கொள்வனவு செய்யப்பட்டது. தனது கணவனின் ஒப்பற்ற அறப்பணியை எண்ணி அவரது துணைவியார் மேடையில் கண் கலங்கி ஆனந்தம் அடைந்தார்.

18 ஆண்டுகளுக்கு பின்னர் பல்வேறு வசதிகளுடன் சிறந்த பராமரிப்பில் தற்போது 80 முதியவர்கள் இங்கு உள்ளார்கள்.





சிறந்த அறப்பணியின் வெளிப்பாடாக கருதப்படும் இந்த முதியோர் இல்லத்திற்கு இந்தியாவின் புகழ்பெற்ற சரவண மாணிக்கவாசக குரு பரமாச்சாரிய சுவாமிகள் திருக்கேதீஸ்வர தர்மபுர ஆதீனத்துடன் வருகை தந்து நல்லாசி வழங்கியதுடன் முதியவர்களை ஆசீர்வதித்தார்.






# சிவபூமி திருக்குறள் வளாகத்தில் இலவச யோகாசன வகுப்புக்கள்



மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள திருக்குறள் வளாகத்தில் 31.03.2025ம் திகதி திங்கட்கிழமை, பி.ப 4.00 மணிக்கு இலவச யோகாசன வகுப்புகள் ஆரம்பமாகின. மனதை ஒருநிலைப்படுத்தி நல்ல உடல் உள ஆரோக்கியத்தை தரும் இந்த பயிற்சி வகுப்பில் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொண்டு பயன்பெற முடியும்.

தொடர்ச்சியாக நடைபெறவுள்ள இந்த வகுப்புகளுக்கு எந்தவித கட்டனங்களும் அறவிடப்படமாட்டாது. பல்வேறு தனிமனித மற்றும் சமூக அவலங்களால் நாள்தோறும் பல இன்னல்களை சந்திக்கும் தற்கால மனித வாழ்விற்கு இந்த பயிற்சி வகுப்பு மிகவும் பயனுள்ளதாக அமையும். சகல வயதுடைய ஆர்வம் உடைய ஆண் பெண் இருபாலாரும் இந்த இலவச பயிற்சி வகுப்பில் பங்கு பற்றி பயன்பெற முடியும்.

# இந்திய பிரதமர் திருக்கோணேஸ்வரர் ஆலய புனரமைப்புக்கு இந்தியா உதவுவதாக உறுதி அளித்தார்



திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை புனரமைக்க இந்தியா உதவும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார் .

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி இலங்கை ஜனாதிபதியுடன் சந்திப்பு நடத்திய பின் கூட்டுச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார். அதில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், திருகோணமலையிலுள்ள திருக்கோணேஸ்வரக் கோயிலின் புனரமைப்புக்கு இந்தியா உதவும். மேலும் அநுராதபுரம் மகாபோதி கோயில் வளாகத்தில் புனித நகரத்தின் கட்டுமானத்திலும் நுவரெலியாவில் சீதா எலிய கோயிலின் கட்டுமானத்திலும் இந்தியா ஆதரவளிக்கும் என்றார்.



# நல்ல மனம் உள்ளவர்களின் ஆற்றல்

போர்க்கலைகளில் கைதேர்ந்தவரான பரத்வாஜ முனிவரின் மகன் துரோணாச்சாரியார். இவரது மனைவி சதானந்தரின் மகளான கிருபி. இவர்களின் ஒரே மகன் அஸ்வத்தாமன். படைப்புக்கடவுளான பிரம்மாவிடம், இந்திரன் பெற்ற தங்கக்கவசத்தை வாங்கி துரியோதனனுக்கு கொடுத்தவர் இவரே.

இந்த துரோணாச்சாரியாரே மகாபாரதக் கதையில் வரும் கவுரவர், பாண்டவர்களின் குருநாதராக இருந்தார். கல்வி, கலைகளை அவர்களுக்கு போதித்தார். விரைவிலேயே தர்மன் ஈட்டி எறிவதிலும், அர்ஜுனன் வில் வித்தையிலும், பீமன், துரியோதனன், துச்சாதனன் மூவரும் கதாயுதம் சுழற்றுவதிலும், நகுலன், சகாதேவன் இருவரும் வாள் வித்தையிலும் தேர்ச்சி பெற்றனர்.

இருப்பினும் இரு அணிகளில் சிலரது மனதில் தீய எண்ணம், கருத்து வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்தார் குருநாதர். நாளடைவில் இந்த எண்ணமே அவர்களை பளிச்சிடச் செய்ய விடாமல் தடுக்குமே என வருந்தினார்.

ஒருமுறை பாண்டவர், கவுரவர்களை அழைத்து, “நாளை மாலை உங்களின் இரு அணியினரையும் அவரவர் மாளிகையில் சந்திக்க வருவேன். அப்போது உங்களின் மாளிகை முழுதும் நிறைந்திருக்க வேண்டும்...புரிகிறதா?” என்றார்.

துரியோதனன் தன் சகோதரர்களுடன் ஆலோசித்தான். முடிவாக அவர்களின் சம்மதத்துடன் மாளிகை முழுவதும் பஞ்சு மூடைகளால் நிரப்பினான். மறுநாள் துரோணாச்சாரியர் முதலில் துரியோதனனின் மாளிகைக்கு வந்தார். ஆனால் வாசல் வரை பஞ்சு மூடைகள் இருந்ததால் அவரால் நுழைய முடியவில்லை. இதைக் கண்டதும், “துரியோதனா! மாளிகைக்குள் நுழைய முடியாதபடி பஞ்சால் நிரப்பி விட்டாயே” என சிரித்தார். ஆனால் மனதிற்குள் கவுரவர்களின் முட்டாள்தனமான செயலை எண்ணி வருந்தினார். அதன் பின் பாண்டவர்களின் மாளிகைக்குச் சென்றார்.

குருவை அன்பாக வரவேற்ற பாண்டவர்கள், அவரை மாளிகைக்குள் அழைத்துச் சென்றனர். குருநாதரிடம் ஆசி பெற்ற பின் அவருக்கு விருந்து அளித்தனர். துரோணாச்சாரியாரின் மனதிற்குள் எந்தப் பொருளாலும் இவர்களின் மாளிகை நிரப்பப்படவில்லையே என எண்ணினார். அங்கிருந்து புறப்படும் போது, “தர்மா... மாளிகையை நிறைத்து வைக்கச் சொன்னேன் அல்லவா? ஆனால் அப்படி எதுவும் செய்யவில்லையே?” எனக் கேட்டார்.

“குருநாதா! எங்கள் மாளிகை முழுவதும் தீபங்களின் ஒளியால் நிரம்பி இருக்கிறது. எங்கள் மனம் முழுவதும் அன்பால் நிறைந்துள்ளதை தாங்கள் அறியவில்லையா?” எனக் கேட்டான். அதைக் கேட்டு மகிழ்ந்த துரோணாச்சாரியார் அவர்களின் புத்திசாலித்தனத்தை எண்ணி மகிழ்ந்தார்.

இந்த நிகழ்ச்சி நடந்த சிறிது நாளில் துரோணாச்சாரியாரின் சீடர்கள் சிலர், “குருநாதா... தர்மர் பண்பின் இருப்பிடமாகவும், துரியோதனன் தீய நடத்தை கொண்டவனாகவும் இருக்கிறாரே... ஏன் இந்த முரண்பாடு எனக் கேட்டனர். உண்மையை உணர்த்துவதற்காக முதலில் துரியோதனனை அழைத்த அவர், “நீ போய் ஒரு நல்ல மனிதனை எந்தத் திசையில் இருந்தாலும் கண்டுபிடித்து என்னிடம் அழைத்து வா” என ஆணையிட்டார். அவனும் வெகுதூரம் சுற்றி அலைந்து விட்டு திரும்பி வந்தான்.

“குருநாதா! எல்லா இடத்திலும் தேடி விட்டேன். நல்ல மனிதன் ஒருவர் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. உலகம் எங்கும் தீய மனிதர்களே இருக்கிறார்கள்” என்றான். உடனே தர்மரை அழைத்து, “நீ ஒரு தீய மனிதனை என்னிடம் அழைத்து வா” என ஆணையிட்டார். தர்மரும் நீண்ட தூரம் பயணம் செய்து விட்டு வெறுங்கையுடன் திரும்பினார்.

“குருவே! எல்லா இடங்களிலும் தேடி விட்டேன். ஆனால் எங்கு தேடியும் ஒரு தீயவரை காண முடியவில்லை” என்றார்.

துரியோதனன், தர்மன் இருவரின் எண்ணமும் முரண்பட்டு இருப்பதை அறிந்த சீடர்கள் ஆச்சரியப்பட்டனர். யார் சொல்வது சரி என்பது அவர்களுக்கு புரியவில்லை.

இந்நிலையில் துரோணாச்சாரியார், “மனதில் உள்ள எண்ணமே நாம் சந்திக்கும் மனிதர்களிடமும் பிரதிபலிக்கும். உலகம் முழுவதும் நல்லவர்களே இருப்பதாக தர்மருக்கு தோன்றுகிறது. ஏனெனில் அவர் மனம் நல்லதாக இருக்கிறது. ஆனால் துரியோதனனுக்கோ, உலகெங்கும் தீயவராகத் தெரிகிறார்கள். ஏன் அப்படி? மஞ்சள்காமாலை வந்தவனுக்கு எல்லாப் பொருட்களுமே மஞ்சளாகத் தானே தெரியும்.

உள்மனம் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் வெளியுலகில் காணும் காட்சி இருக்கும். நீங்கள் மனதால் நல்லவர்களாக வாழ்ந்தால் அப்போது உலகமும் நல்லதாகவே தெரியும்” என்றார் துரோணாச்சாரியார்.



# முள்ளிவாய்க்கால் மண்ணில் புதிய ஒளிக்கீற்றாக சிவபூமி மனவிருத்தி பாடசாலை உதயமாகிறது

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளிவாய்க்கால் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில், சமூக மாற்றத்திற்கும், மனித நேய வளர்ச்சிக்கும் ஆதரவாக ஒரு புதிய முயற்சி ஆரம்பமாகியுள்ளது. சிவபூமி அறக்கட்டளை கடந்த காலத்தின் வலிகளையும், எதிர்காலத்தின் நம்பிக்கையையும் தாங்கிக்கொண்டு, அந்த பகுதியில் 'சிவபூமி மனவிருத்தி பாடசாலை' அமைப்பதற்கான திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

2025 மார்ச் 19ஆம் திகதியன்று, இந்தப் பயணத்தின் முதற்கட்ட வேலைகளை, சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் நேரில் கலந்து கொண்டு, ஆரம்பித்து வைத்தார். இது அந்த மண்ணின் மீதான அவரின் பற்றும், மக்கள் மேம்பாட்டிற்கான விடாமுயற்சியையும் எடுத்துக்காட்டுகிறது.



முள்ளிவாய்க்கால் எனும் இடம் கடந்த காலத்தில் பெரும்வலியைக் கண்ட புனித மண். அந்த இடத்தில் இப்போது மனவிருத்தி மற்றும் கல்வி வளர்ச்சிக்கான ஒரு புதிய முயற்சி ஆரம்பமாகுவது, அந்த வலியை மரியாதையுடன் நினைத்து, புதிய தலைமுறைக்கு ஒரு உற்சாகமான எதிர்காலத்தை உருவாக்கும் முக்கியமான அடையாளமாக இருக்கின்றது.

# இணைபாடவிதான செயற்பாடுகளில் சாதித்ததனூடாக சட்டத்துறைக்கு தெரிவாகியுள்ள மாணவன்



கலைத்துறைக்கு (Arts) தெரிவாகியிருந்த செல்வன் ஜெயபாலன் தவேதன் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேசிய மட்ட சாதனையாளர்கள் நேர்முகத்தேர்வின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக் கழகத் தெரிவிற்காக க.பொ.த உயர்தர பரீட்சையில் மேலதிக Z புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளில் இணைபாடவிதானச் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களிலும் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுக்கு ணு புள்ளி கணிக்கப்படுகிறது. எனினும் மாணவர் ஒருவர் இணைப்பாடவிதானத்தில் வெளிப்படுத்திய திறமைகளுக்காக, அவருடைய Z புள்ளியிலிருந்து 0.2000 வித்தியாசத்தில் உள்ள கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மேலதிக வாய்ப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கி வருகிறது. இதனடிப்படையில் எமது பாடசாலையின் க.பொ.த உயர்தரம் 2023 கலைப் பிரிவு மாணவனுக்கு சட்டத்துறை (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்) செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் அவரால் ஈட்டப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான சான்றுகள் வருமாறு,

உயர்தரப் பரீட்சை பெறுபேறு – 3A
மாவட்ட நிலை – 30
Z – புள்ளி 1.7667

### தலைமைத்துவச் செயற்பாடுகள்

1) உதவிச் சிரேஷ்ட மாணவ முதல்வர்- மாணவ முதல்வர் சபை
2)தலைவர் - விவாதமன்றம்

3) தமிழ்ச்சங்கம் - பத்திராதிபர்
4)இன்ரறக்ட் கழகம்- பசுமைத்திட்ட இயக்குநர்
5)கலைமாணவர் ஒன்றியம் - உபதலைவர்
6)ஆக்க இலக்கியக் கழகம் - பொருளாளர்
7)அரசறிவியல் மன்றம் - உறுப்பினர்

## இணைபாடவிதான சாதனைகள்

8)அகில இலங்கை தமிழ்மொழித்தினம் 2023 - அறிவிப்பாளர் போட்டி - தேசிய ரீதியில் முதலாமிடம்
9)அகில இலங்கை தமிழ்மொழித்தினம் 2022 - விவாதப் போட்டி - தேசிய ரீதியில் இரண்டாமிடம்
10)நின்னாத ஊடகப் போட்டி - 2022 வானொலி முன்வைப்பு - முதலாமிடம்
11) நின்னாத ஊடகப் போட்டி- அறிவிப்பு - முதலாமிடம்
12)வேத்தியர் கிண்ணம் விவாதச்சுற்றுப்போட்டி - 2023 - முதலாமிடம்
13) சொற்கணை 2023 - மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழிலக்கிய மன்றத்தின் விவாதப்போட்டி - தேசிய நிலை இரண்டாமிடம்
14) All Island English language day and competitions - 2023- Impromptu- Third place - provincial level
15) Fourth International research conference on Tamilology - 2023 (UOJ) Tamil speech competition- First Place - provincial Level
16) Tamil oration competition- School science programme- 2022 /2023 provincial level - 2nd place
17) பாடசாலை மட்ட இணைபாடவிதான சான்றிதழ்கள்
18)Srilankan Junior Astronomy Olympiad competition - Merit Award

## விசேட தகைமைகள்

19) சொல்லாடல் - 2022 ரூ 2023 அணித்தலைவர் ( Annual bigmatch debate between Jaffna Hindu college & Hindu College> Colombo
20)பாடசாலைப் பரிசுத்தின சிறந்த தாய்மொழிச் செயற்பாட்டாளர் பதக்கம்- 2023
21) பாடசாலைப் பரிசுத்தின சிறந்த விவாதிக்கான பதக்கம்- 2023

நேர்முகத்தேர்வில் உயர்தரக் காலப்பகுதியில் பெற்ற அடைவுகள் பிரதானமாக கொள்ளப்பட்டாலும் பாடசாலைக் கால அடைவுகள் அனைத்தும் கருத்திற்கொண்டு நோக்கப்பட்டது.

பாடசாலையால் வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரம், மற்றும் மாணவர் முதல்வர் சபையால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் என்பனவும் கருத்திற் கொள்ளப்பட்டன. இத்தகைய ஆளுமைத்திறனை வெளிப்படுத்தி சட்டத் துறைக்கு தெரிவான மாணவன் ஜெ.தவேதன் அவர்களுக்கு யாழ் இந்து சமூகம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே மாணர்வர்கள் மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு இணைப்பாடவிதானத்தில் கவனமெடுத்து தங்களது ஆளுமைத் திறனை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.

இ.செந்தில்மாறன்,
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## சிவபூமி திருக்குறள் வளாகத்தில் தங்கியிருந்து இடத்தை மேன்மைப்படுத்திய தர்மபுர ஆதீன சுவாமிகள்

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழாவை முன்னிட்டு, இந்தியாவின் தர்மபுர ஆதீன சுவாமிகள் இலங்கை வருகை செய்ததோடு, அவர் மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகத்தில் தங்கியமை சிவபூமி அறக்கட்டளையின் பாக்கியமாக கருதுகிறோம்.





சிவபூமி திருக்குறள் வளாகம் என்பது தமிழர் ஆன்மீக மற்றும் பண்பாட்டு எழுச்சிக்கு வழிவகுக்கும் ஒரு இடமாக தொடர்ந்து உருவெடுத்து வரும் நிலையிலே, சுவாமிகள் தங்கியதன் மூலம் அந்த இடத்தின் ஆன்மீக நிறைவு மேலும் உயர்ந்துள்ளது.

# பங்குனி திங்கள் பொங்கல் வழிபாடு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது




யாழ்ப்பாணம் மட்டுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பங்குனி திங்கள் பொங்கல் விழா இந்த வருடமும் மிகுந்த பக்தி, ஆழ்ந்த ஆன்மீக உணர்வுடன் சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவானது தமிழ் மக்களின் மரபு வழி ஆன்மிக பெருவிழாக்களில் ஒன்றாகும்.

பொங்கல் வழிபாடு நாளில், பெருமளவான பக்தர்கள் காலை முதலே ஆலயத்துக்கு வந்து அம்மனுக்காக சிறப்பான பொங்கல் சமர்ப்பணம் செய்து, தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். வெந்நெருப்பில் வெந்து பொங்கிய சர்க்கரை பொங்கல், அரிசி பொங்கல், பல்வேறு வகையான பழவகைகள், மலர்கள் மற்றும் விளக்குகளால் ஆலயம் ஒளிர்ந்தது.





இந்த ஆண்டின் பங்குனி திங்கள் பொங்கல் விழா மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் இனிதும் அமைதியுடனும் நடைபெற்றது. பக்தர்கள் அனைவரும் தங்கள் மனதின் பாரத்தை இறைவி முன்னிலையில் இறக்கி, அமைதி, நம்பிக்கை, ஆன்மிக நெருக்கம் ஆகியவற்றை உணர்ந்தனர். இது போன்ற விழாக்கள், நம் சமூகத்தில் உள்ள ஆன்மிக ஒற்றுமையை வலுப்படுத்தும் பெரும் நிகழ்வுகளாகும்.



# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் மணவாளக் கோல உற்சவம்

2025 ஏப்ரல் 11, பங்குனி உத்திர நன்னாளில், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மஹா கும்பாபிஷேகம் நாளை முன்னிட்ட பூசை வழிபாடுகள் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெற்றது.




அதிகாலை முதல் சங்காபிஷேகங்கள், ஹோமங்கள், சிறப்பு பூஜைகள் என ஆன்மீக ஆராதனைகள் தொடங்கின. ஆலய வளாகம் புனித தெய்வீக அமைப்பை உருவாக்கியது. பெருமளவான பக்தர்கள், அருகிலுள்ள கிராமங்கள் மற்றும் தொலைதூரங்களிலிருந்து வந்து, தாயாரின் அருள் பெற்றுப் புனித தரிசனம் செய்தனர்.




கடந்த வருடம், இதே புனித நாளில் புதிதாக மீள்நிர்மாணிக்கப்பட்ட துர்க்காதேவி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றதையும் இந்நாளில் நினைவுகூர்ந்து, அதற்கான நன்றியாகவும் இந்த ஆண்டின் பூஜைகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.









# ஈழத்தில் பல இடங்களில் நடைபெற்ற யோகசுவாமிகள் குருபூசை விழா




யோகசுவாமிகள், ஈழத் தமிழரின் ஆன்மிக வாழ்வில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திய அருட்குருவாக அறியப்படுகிறார். அவரது குருபூசை ஆண்டுதோறும் பக்தியுடன் நினைவுகூரப்படும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

குறிப்பாக, யோகசுவாமிகளின் சமாதி அமைந்துள்ள கொழும்புத்துறை யோகசுவாமிகள் திருக்கோயிலிலும், அவரின் சீடராக விளங்கிய ஹவாய் சுப்பிரமுனியசுவாமிகள் நிறுவிய அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்திலும், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்திலும் குருபூசை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றது. யோகர் சுவாமிகள் பற்றிய சிந்தனைகள் இங்கே பரிமாறப்பட்டு, அவரது நற்சிந்தனை பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டது.











இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(சித்திரை-2025) ISBN-978-955-7420-00-4